**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண். 25/2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரமேஷ் | மதம் | : |
| த/பெ | : சிவலிங்கம் | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**05.08.2024**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

**1.** நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் தமிழில் தாக்கல் செய்கிறேன். நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்குத் தெரியும். 25.11.1978ம் தேதியிட்டு என் மாமனார் நடேச ரெட்டி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் தமிழ் மொழிபெயர்ப்புடன் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 2.03.1973ம் தேதியிட்டு என் மாமனார் நடேச ரெட்டி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் தமிழ் மொழிபெயர்ப்புடன் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 06.01.1992ம் தேதியிட்டு என் மாமனார் நடேச ரெட்டி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் தமிழ் மொழிபெயர்ப்புடன் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 11.09.2014ம்

தேதியிட்டு என் மனைவி பாரதிக்கு முனியம்மாள் வகையறா எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 11.09.2014 ம் தேதியிட்டு என் மனைவி பாரதிக்கு முனியம்மாள் வகையறா எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 30.06.2017 ம் தேதியிட்டு என் மனைவி எனக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நடேச ரெட்டி வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். **(வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் மனைவி பெயரில் பட்டா எண்.2136 ல் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **( பட்டா வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. 02.11.2016 ம் தேதியிட்ட வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 1430 ம் பசலிக்கான சாகுபடி அடங்கல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(சாகுபடி அடங்கல் வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தாவா சொத்திற்கான வில்லங்க சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(பிரதிவாதி தரப்பில் எந்த எடுத்துரைப்பும் இல்லாததால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)